[1979 ஏப்ரல் 7

[முற்பகல் 10-00.]

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் டெல்லி சென்று வென்று வருகிறேன் என்று சொன்னார்கள். மண்ணெண்ணெயோடு வருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அறிக்கை கொடுக்கத் தாமதம் ஆவதைப் பார்க்கிறபொழுது எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. மண்ணெண்ணெய் வருமா, வராதா என்பதைப்பற்றி அவையில் சொல்லலாமே. திங்கட்கிழமை வரையில் விளக்கு எரியுமா..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், அறிக்கையைப் பார்ப்போம்.

மாண்புமிகு திரு. க. உஹரா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்களுக்கு அவநம்பிக்கையிருக்க வேண்டிய அவசியமே இல்லை.

(ஆ) என். ஜி. ஓ.க்கள் பிரச்சினை குறித்து.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, என். ஜி. ஓக்கள் பிரச்னை சம்பந்தமாக நாங்கள் கொடுத்த அட்ஜார்ன்மெண்ட் மோஷன்ஸ் பெண்டிங்காக இருக்கிறது. முந்தாநாள் பேச்சு வார்த்தை நடக்கப் போவதாக பைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் சொன்னார்கள். ஏதாவது நெகோஷியேஷன் நடந்ததா? அது எந்த ஸ்டேஜில் இருக்கிறது? அதை எப்பொழுது எடுக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. இதுபற்றிச் சர்க்கார் சார்பாக ஏதாவது சொன்னால் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. அரசு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது. தக்க நேரத்தில் அவை முன்னவரவர்கள் அதை இந்த அவைக்குத் தெரிவிப்பார்கள்.